# சென்னை மாவட்டம்
# தமிழ் – ஒரு மதிப்பெண் தேர்வு
# 10ஆம் வகுப்பு – 2024 –25

**நேரம் : 15 நிமிடம் + 2 மணி** **மதிப்பெண்கள் : 100**

1. **'மெத்த வணிகலன்'** என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது –
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) கொண்டல் – 1. மேற்கு
ஆ) கோடை – 2. தெற்கு
இ) வாடை – 3. கிழக்கு
ஈ) தென்றல் – 4. வடக்கு
**அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2**

3. **'உனதருளே பார்ப்பன் அடியேனே'** – யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4. பழமொழிகளைப் பொருத்துக.
அ. ஆறில்லா ஊருக்கு – 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்
ஆ. உப்பில்லாப் பண்டம் – 2. நூறு வயது
இ. நொறுங்கத் தின்றால் – 3. குப்பையிலே
ஈ. ஒரு பானை – 4. அழகு பாழ்
அ) அ – 4, ஆ – 1, இ – 3, ஈ – 2 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1
இ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3 ஈ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2

5. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய அளபெடுப்பது –
அ) ஒற்றளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

6. மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் எனக் கூறியவர் –
அ) திருமூலர் ஆ) ஔவையார் இ) சொக்கநாதப் புலவர் ஈ) ஐயூர் முடவனார்

7. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது
அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

8. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க.
**ஆறப்போடுதல் –**
அ) தாமதப்படுத்துதல் ஆ) ஆற்றில் போடுதல்
இ) ஆறவைத்தல் ஈ) ஆற்றில் இறங்குதல்

9. **கூரான ஆயுதம்** என்று திருவள்ளுவர் குறிப்பிடுவதைத் தேர்க.
அ) பெரிய கத்தி ஆ) இரும்பு ஈட்டி

இ) உழைத்ததால் கிடைத்த ஊதியம்    ஈ) வில்லும் அம்பும்

10. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலில் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்

அ) எள்கசடு    ஆ) பிண்ணாக்கு    இ) ஆமணக்கு    ஈ) எள்கட்டி

11. **"சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி"** என்னும் அடியில் பாக்கம் என்பது –

அ) புத்தூர்    ஆ) மூதூர்   இ) பேரூர்    ஈ) சிற்றூர்

12. பாரதியார் காற்றை 'மயலுறுத்து' என்று அழைப்பதற்கான பொருளைத் தேர்க.

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா

ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா

இ) மயிலாடும் காற்றாய் நீ வா

ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

13. **'<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>'** நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –

அ) இலையும் சருகும்    ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும்    ஈ) சருகும் சண்டும்

14. **எந்தமிழ்நா** என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்–

அ) எந் + தமிழ் + நா    ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா    ஈ) எந்தம் + தழிழ் + நா

15. **'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'** –தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே–

அ) பாடிய; கேட்டவர்    ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய    ஈ) பாடல்; கேட்டவர்

16. **"உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"** – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை    ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு    ஈ) உவமை, எதுகை

17. **செய்தி 1** – ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

**செய்தி 2** – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

**செய்தி 3** – காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

அ) செய்தி 1 மட்டும் சரி    ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி    ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

18. **'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி'** என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்    ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல்    ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

<u>19. **'பெரியமீசை சிரித்தார்'**</u> – அடிக்கோடிட்ட தொடருக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை    ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை    ஈ) உம்மைத்தொகை

20. பின்வருவனவற்றுள் முறையான தொடர் –

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.

ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.

இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

21. **வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை** ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை –

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

22. ஜெயகாந்தன் படைப்புகளில் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற நூல் –

அ) யாருக்காக அழுதான் ஆ) சில நேரங்களில் சில மனிதர்கள்

இ) உன்னைப் போல் ஒருவன் ஈ) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

23. **அறிஞருக்கு நூல், அறிஞரது நூல்** ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது –

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

24. **காசிக்காண்டம்** என்பது –

அ) காசி நகரத்தின்வரலாற்றைப் பாடும் நூல்

ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்

ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

25. **'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீரியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான்**' என்கிறது **புறநானூறு'**. இச்செய்திஉணர்த்தும் விருந்து போற்றிய நிலை –

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

26. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

**தலைப்பு :** செயற்கை நுண்ணறிவு

**குறிப்புகள்:** கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது.

திறன்பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.

அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

27. பரிபாடல் அடியில் **'விசும்பும் இசையும்'** என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்

இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

28. குலசேகர ஆழ்வார் **'வித்துவக்கோட்டம்மா'** என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே –

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
ஈ) காலவழுவமைதி, இடவழுவமைதி

29. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

30. **'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்'** என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி–
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

31. **அருந்துணை** என்பதைப் பிரித்தால் ---
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை

32. **"இங்கு நகரப் பேருந்து நிற்குமா"** என்று வழிப்போக்கர் கேட்பது ---- வினா.
**"அதோ அங்கே நிற்கும்"** என்று மற்றொருவர் கூறியது ------- விடை.
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியா வினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

33. **புல்** என்ற சொல்லின் கூட்டப் பெயரைத் தேர்க.
அ) கட்டு ஆ) குலை இ) குவியல் ஈ) தாறு

34. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ----- ; இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ------.
அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

35. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ....
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்
ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

36. **கூற்று 1 : போடாட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்**
**கூற்று 1 : அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.**
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி

37. **மலர்கள் தரையில் நழுவும்.** எப்போது?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

38. தூக்குமேடை என்னும் நாடக்தின் பாராட்டுவிழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது – இத்தொடருக்கான வினா எது?
அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?
ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?
இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

39. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

40. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு

இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

41. **'மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்'**– மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே–

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்

இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

42. வெட்டிய மரங்களுக்கு ஈடாக ………………… நட்டு வளர்த்தனர். தொடரில் விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தேர்க.

அ) மரவேர்களை ஆ) மரக்கிளைகளை

இ) மரங்களை ஈ) மரக்கன்றுகளை

43. **இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் –––.**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

44. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக **ம.பொ.சி.** கருதியது –––––

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

45. **மேன்மை தரும் அறம்** என்பது –––––

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

46. **"வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்"** இவ்வடி குறிப்பிடுவது……

அ) காலம் மாறுவதை

ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை

ஈ) வண்ணம் பூசுவதை

47. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் –––––, –––––.

அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்

இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

48. **காலக்கணிதம்** கவிதையில் இடம்பெற்ற தொடர் –––––.

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது

ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்

ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

**49. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் –**

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**50. "இவள் தலையில் எழுதியதோ**

**கற்காலம்தான் எப்போதும்"**..... இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம்

இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது.

**51. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்** – ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது –

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்.

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.

52. இயற்கை நிகழ்வுகளோடு ஒப்பிடத் தகுந்தனவற்றைப் பொருத்துக.

| | |
|---|---|
| 1. துளிர்க்கும் நாற்றுகள் | அ. அச்சம் |
| 2. இளந்தென்றல் | ஆ. குழந்தைகள் முகம் |
| 3. சுழன்றடிக்கும் புயல் | இ. நம்பிக்கை |
| 4. மலர்ந்த மலர்கள் | ஈ. இன்ப உணர்வு |

அ) 1 – இ, 2 – ஈ, 3 – அ, 4 – ஆ

ஆ) 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ

இ) 1 – அ, 2 – ஆ, 3 – ஈ, 4 – இ

ஈ) 1 – இ, 2 – அ, 3 – ஈ, 4 – ஆ

**53. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க** என்று ----, ---- வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

**54. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்'** என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்–

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**55. "விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்"** இத்தொடரில் **'வேறார்'** என்ற சொல் குறிப்பது–

அ) வேற்று மொழியார் ஆ) வேண்டியவர் இ) வேறு ஒருவர் ஈ) வெற்றியாளர்

**56.** தமிழ்மொழிக்காக மாநாடு நடத்திய முதல் நாடு–

அ) அமெரிக்கா ஆ) மலேசியா இ) சிங்கப்பூர் ஈ) சீனா

57. நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?

அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை

இ) வெற்றி வேற்கை ஈ) காசிக்காண்டம்

**58. 'மொழி ஞாயிறு'** என்று அழைக்கப்படுபவர் –

அ) தேவநேயப் பாவாணர் ஆ) இரா.இளங்குமரனார்

இ) பாரதியார் ஈ) பாரதிதாசன்

**59. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி**

**மருளை அகற்றி மதிக்கும் தெருளை"**

– என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

**60. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மானவனுக்கு வகுப்பது பரணி** – இச்செய்யுள் அடியில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களின் தமிழ் எண்ணைத் தேர்க.

அ) க000 ஆ) ங00 இ) அ00 ஈ) எ000

**61. இன்சொல்** – இச்சொல்லின் தொகையை அடையாளம் காண்க.

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

62. ஊர்ப்பெயர்களின் மரூஉக்களில் பொருத்தமானதைத் தேர்க?

அ) புதுக்கோட்டை–புதுவை ஆ) புதுச்சேரி–புதுகை

இ) திருநெல்வேலி–திருச்சி ஈ) கும்பகோணம்–குடந்தை

63. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ……… ,
மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது ……… ,
கல் சிலை ஆகுமெனில், நெல் ……… ஆகும்,
விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை ……… .
தொடர்களைப் படித்துப் பொருத்தமான விடை வரிசைகளை விடுபட்ட இடங்களுக்கு ஏற்பத் தேர்க.

அ) பூவில், சோறு, கரு, கற்றல் ஆ) கற்றல், சோறு, கரு, பூவில்

இ) கற்றல், பூவில், சோறு, கரு ஈ) கரு, சோறு, கற்றல், பூவில்

64. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக **ஜெயகாந்தன் கருதுவது**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்.

இ) அறிவியல் முன்னேற்றம்.

ஈ) வெளிநாட்டு முதலீடுகள்.

65. **எர்லி மார்னிங்** எழுந்து **வாக்கிங்** சென்று வந்து **டீ** குடித்த அம்மா, **நியூஸ் பேப்பரைப்** படித்துக்கொண்டிருந்தார். – இத்தொடரில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களுக்களின் சரியான வரிசையைத் தேர்க.

அ) வைகறை, நடைப்பயிற்சி, பத்திரிக்கை, தேநீர்

ஆ) அதிகாலை, நடந்து, தேநீர், பத்திரிக்கை

இ) காலை, நடை, தேநீர், செய்தி

ஈ) வைகறை, நடைப்பயிற்சி தேநீர், செய்தித்தாள்

66. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்தி, சரியான விடையைத் தேர்க.

1. உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு – அ. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை
2. உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் – ஆ. நடு ஊருள் நச்சு மரம் பகுத்தற்று
3. ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது – இ. உயிரினும் ஓம்பப்படும்
4. ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் – ஈ. மெய்ப்பொருள் காண்ப தறிவு.

அ) 1 – அ, 2 – இ, 3 – ஆ, 4 – ஈ ஆ) 1 – ஈ, 2 – இ, 3 – ஆ, 4 – அ

இ) 1 – இ, 2 – அ, 3 – ஆ, 4 – ஈ ஈ) 1 – ஈ, 2 – இ, 3 – அ, 4 – ஆ

67. **'இஸ்மத் சன்னியாசி'** என அழைக்கப்படுவர் யார்?

அ) உமறுப்புலவர் ஆ) வீரமா முனிவர்

இ) செய்கு தம்பிப் பாவலர் ஈ) ஜி.யு.போப்

68. **தாய்சேய்** – இச்சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

69. **'கலை ஞாயிறு'** என அழைக்கப்படுபவர் யார்?

அ) தேவநேயப் பாவாணர் ஆ) என்.எஸ்.கிருஷ்ணன்

இ) ந. முத்துசாமி ஈ) பாரதிதாசன்

70. **'எய்துவர் எய்தாப் பழி'** – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

71. **'காலம் கரந்த பெயரெச்சம்'** என்பது –

அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை

இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

72. தாயைப் பிரிந்திருக்கும் மகள் --------- வருந்திக்கொண்டிருந்தாள். – தொடரில் விடுபட்ட இடத்தில் பொருத்தமான உவமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.

அ) தாமரை இலை நீர்போல் ஆ) வாழையடி வாழையாக

இ) கண்ணினைக் காக்கும் இமை போல ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல

73. **வெஃஃகுவார்க்கில்லை, உரனசைஇ** –இச்சொற்களில் உள்ள அளபெடைகள்–

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை

ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை

ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

74. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் –

அ) திரு.பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ. நேசமணி

இ) தனிநாயகம் அடிகள் ஈ) ஜெயகாந்தன்

75. **'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'** – பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் பொருத்தமான கருத்தைத் தேர்ந்தெடுக்க.

அ) பல்துறை நூல்கள் தமிழில் கவிஞர்களால் உருவாக்கப்பட வேண்டும்.

ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்றி, அவற்றை வளர்க்க வேண்டும்.

இ) உலகெங்கும் காணப்படும் கலைச்செல்வங்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.

ஈ) கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து நாம் அனைவரும் கண்டுகளிக்க வேண்டும்.

76. **திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்** – இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்ட சரியான தொடரைத் தேர்க.

அ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' 'அறுதியிட்டுக்'

கூறுகிறார்.

ஆ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், "அறிவுடையார், எல்லாம் உடையார்'' என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஈ) 'திருவள்ளுவர்', "அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

77. **வாய்மையே மழைநீராகி –** இத்தொடரில் வெளிப்படும் அணி –

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

78. **'கானடை'** என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.

அ. கான் அடை – காட்டைச் சேர் ஆ. கால் உடை – காலால் உடைத்தல்

இ. கான் நடை – காட்டுக்கு நடத்தல் ஈ. கால் நடை – காலால் நடத்தல்

79. **திணைவழுவமைதி** அமைந்த தொடரைத் தேர்ந்தெடுக்க.

அ) 'இந்தப் பாப்பா தூங்கமாட்டாள்' என்று குழந்தை தன்னையே குறிப்பிடுவது.

ஆ) இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது.

இ) 'வாடாச் செல்லம்' என்று தந்தை மகளை அழைப்பது.

ஈ) 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது.

80. **'நீர்'** குறித்த புதிருக்கான விடையை வரிசைப்படித் தேர்ந்தெடுக்க.

பொழியும் போது ஒரு பெயர்
தவழும்போது ஒரு பெயர்
விழும்போது ஒரு பெயர்
உருளும்போது ஒரு பெயர்
திரண்டோடும் போது ஒரு பெயர் – அவை என்ன?

அ) நீர், மழை, ஆறு, ஓடை, புனல் ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம், ஆறு

இ) மழை, நீர், அருவி, ஆறு, வெள்ளம் ஈ) மழை, வெள்ளம், மேகம், நீர், அருவி

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

**"உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**
**அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி**
**முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!"**

81. பாடலின் ஆசிரியர்–

அ) பாரதியார் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்

இ) பாரதிதாசன் ஈ) தமிழழகனார்

82. பண்புத்தொகையைத் தேர்ந்தெடுக்க.

அ) செந்தாமரை ஆ) வீசுதென்றல் இ) உணர்வெழுப்ப ஈ) சிறகார்ந்த

83. **தும்பி** என்னும் சொல்லுக்கான பொருளைத் தேர்க.

அ) கனல் ஆ) உந்தி இ) யாண்டும் ஈ) வண்டு

84. பாடல் இடம்பெற்றுள்ள நூல் –

அ) உலகியல் நூறு ஆ) பாவியக் கொத்து இ) கனிச்சாறு ஈ) எண்சுவை

**"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**
**கரு வளர் வானத்து இசையில் தோன்றி,**

**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;**
**உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"**

85. இப்பாடல் இடம் பெற்ற நூல் –

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) பரிபாடல் ஈ) பதிற்றுப்பத்து

86. இப்பாடலை இயற்றியவர்–

அ) கீரந்தையார் ஆ) குலசேகராழ்வார்

இ) அதிவீரராம பாண்டியர் ஈ) பெருங்கௌசிகனார்

87. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை நயத்தைக் கண்டறிக.

அ) கரு வளர் – உரு அறிவாரா ஆ) உரு அறிவாரா – உந்து வளி

இ) விசும்பில் – கரு வளர் ஈ) விசும்பில் – வானத்து

88. **விசும்பு** என்ற சொல்லின் பொருள் –

அ) மழை ஆ) காற்று இ) வானம் ஈ) நீர்

**"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு**
**வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை**
**நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,**
**பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு"**

89. இப்பாடல் இடம்பெற்ற நூல்------?

அ) சிலப்பதிகாரம் ஆ) திருவிளையாடற் புராணம்

இ) முல்லைப்பாட்டு ஈ) குறிஞ்சிப்பாட்டு

90. இப்பாடலை இயற்றியவர் யார்?

அ) காரியாசான் ஆ) நல்லந்துவனார் இ) நக்கீரனார் ஈ) நப்பூதனார்

91. **நேமி–** பொருள் தருக.

அ) முத்து ஆ) கடல் இ) சங்கு ஈ) சக்கரம்

92. பாடலில் உள்ள மோனைச் சொற்களை எழுதுக.

அ) நனந்தலை – உலகம் ஆ) நீர் – நிமிர்ந்த

இ) வலம்புரி – தடக்கை ஈ) வலம்புரி – பொறித்த

**"எமது உயிர் – நெருப்பை நீடித்துநின்று நல்லொளி தருமாறு**
**நன்றாக வீசு.**
**சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே.**
**பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.**
**மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்**
**நின்று வீசிக் கொண்டிரு.**
**உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.**
**உன்னை வழிபடுகின்றோம்."**

93. இப்பாடலை இயற்றியவர் –

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) வைரமுத்து ஈ) சுரதா

94. **லயத்துடன்** – பொருள் தருக?

அ) சீராக ஆ) வேகமாக இ) அழுத்தமாக ஈ) மெதுவாக

95. இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

அ) நெருப்பு – தருமாறு ஆ) அவித்துவிடாதே – மடித்துவிடாதே

இ) பாடுகிறோம் – கூறுகிறோம் ஈ) சக்தி – குறைந்து

**96.** பாடலில் உள்ள இயைபுச் சொற்களை எழுதுக

அ) நெருப்பு – நீடித்து ஆ) அதனை – அவித்து

இ) பாட்டுகள் – பாடுகிறோம் ஈ) பாடுகிறோம் – கூறுகிறோம்

**"வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**பகர்வனர் திரிதிரு நகர வீதியும்;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"**

97. செய்யுள் அடிகளில் இடம் பெற்றுள்ள அடி மோனைச் சொற்களைத் தேர்க.

அ) பகர்வனர், கட்டு ஆ) வீதியும், நூலினும்

இ) பருத்தி, காருகர் ஈ) பகர்வனர், பட்டினும்

**98. காருகர்** என்ற சொல்லின் பொருள் –

அ) நெய்பவர் ஆ) சிற்பி இ) ஓவியர் ஈ) துகிர்

**99.** அடி எதுகைச் சொற்களைத் தேர்க.

அ) பகர்வனர், நகரவீதியும் ஆ) பட்டினும், கட்டு

இ) நூலினும், இருக்கையும் ஈ) திரிதரு, மயிரினும்

**100.** செய்யுள் இடம்பெற்றுள்ள நூல் -----------------

அ) மெய்க்கீர்த்தி ஆ) கம்பராமாயணம்

இ) சிலப்பதிகாரம் ஈ) திருவிளையாடற் புராணம்